# தமிழ் கற்பித்தலில் பல்லூடகங்களின் பங்கு

**முனைவர் இரா.மனோகரன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி, குரும்பலூர், பெரம்பலூர் -621107

கணினி வழி தமிழ்கற்பித்தலில் பல்லூடகங்களின் பங்களிப்பினை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. குறிப்பாக ஒலி(Audio), ஒளி(Visual), படக்காட்சிகள், முதலியவற்றைப் பயன்படுத்துதலை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்படும் இலவச மென்பொருட்களின் வழியாக தமிழ் கற்பித்தலை எளிமைப்படுத்த இக்கட்டுரை வழிகாட்ட முனைகிறது.

இன்றைய உலகம் காட்சி ஊடகங்களால் சூழப்பட்டதாகும். கல்வி கற்பித்தலில் புதிய புதிய அணுகுமுறைகள் தோன்றியவண்ணம் உள்ளன. அவற்றிற்கேற்ப நாமும் நமது அணுகுமுறைகளை மாற்ற வேண்டியவர்களாகிறோம். கல்வி கற்பித்தலில் கணினி பயன்பாடு அளப்பறியது. அதனைக் கொண்டு சேர்க்கும் வகைகளும் பல்கிப் பெருகி வருகின்றன. இணையத்தோற்றம் கல்வி கற்பித்தலில் நிலைத் தன்மையை ஏற்படுத்த முயன்று வருகிறது.

நிலைத்தன்மை ஏற்படும்போது புதிய புதிய வழிமுறைகளை கையாளுதல் அவசியமாகிறது. அவற்றில் ஒன்றே பல்லூடகங்களின் பங்கு குறித்து அறிவதாகும்.

கணினி செயற்பாட்டியல் தளம்

கணினியைப் பயன்படுத்துவதில் மூன்று முக்கிய நிலைகள் உள்ளன.

1. வன்பொருள் ( hardware)
2. மென்பொருள் ( Software)
3. பயன்பாட்டியல் ஊடகம் ( Applications)

இவற்றுள் வன்பொருள் என்பது கணினியின் உள்உறுப்புக்களைக் குறிப்பதாகும்.

கணினி செயல்படத் தேவையான நிகரன்களை உருவாக்கி அவற்றை மென்மங்களாகச் செயல்படச் செய்தல் மென்பொருட் பயன்பாடாகும். இவை கணினியின் செயற்பாட்டியல் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

கணினியின் செயற்களமாகப் பயன்படும் இடங்களே பயன்பாட்டியல் ஊடகம் ஆகும். கணினியைப் பயன்படுத்த முதலில் பயன்பாட்டியல் ஊடகங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. இவை ஒவ்வொரு இயக்கு தளத்திற்கும்


(Operating System) தனித்தனியாகவும் பலவற்றில் பயன்படுத்தும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.

கணினியின் செயற்களமான இவற்றில் இக்கட்டுரை Microsoft எனும் நிறுவனத்தின் செயற்பாட்டியல் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை MS Word, MS excel, MS PowerPoint போன்ற MS office package –களே வாரியான பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் பயன்படுத்தப்படும் சுருக்கு வழிகளே எளிதில் பயனர்களுக்கான புரிதலுடையதாக(User friendly) கருதப்படுகிறது.


பல்லூடகம்(multimedia)

பல்லூடகம் என்பது கணினி பயன்படுத்துதலில் மற்றுமொரு திருப்புமுனை கொண்டதாகும். இது விளக்கக் காட்சி அமைப்பினை முதன்மைப்படுத்துகிறது. பண்டைய கல்வி கற்பித்தலுக்கான உபகரணங்களை இது அப்புறப்படுத்தியுள்ளது. பல்லூடகத்தின் வழியான கற்பித்தலில் ஒளி, ஒலி காட்சிகளும், அனிமேஷன்களும் கற்பவரைத் தன்வசப்படுத்த அமைக்கப்படுகின்றன. இவற்றைக் கற்பித்தலில் எளிய நிலை இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

பல்லூடகங்களில் எளிய முறைகளான ஒலி(Audio)யைப் பயன்படுத்துல் முதல்நிலையாகும். பல்லூடகங்களில் ஒலி மிகச்சிறப்பிடம் பெறுகிறது. மென்மங்களில் ஒலி அமைப்பினைக் கட்டுப்படுத்துதல் மிக எளிதானதாகவும் பல்வகையான ஒலி வடிவங்களை ஒன்றிணைத்தலும் adobe Audition எனும் மென்பொருள் சிறப்பாகச் செயல்படுகிறது. பல்வேறு ஒலிஅமைப்புக்களை ஒன்றிணைக்க Multi track எனும் பின்வரும் படம் எடுத்தாளப்படுகிறது.




ஒருவகையான ஒலி அமைப்பினைப் பயன்படுத்த Single Track எனும் பகுதி பயன்படுத்தப்படுகிறது.




ஒலிப்பயன்பாட்டில் திருத்தங்களை மேற்கொள்ள MS Word சுருக்கு வழிகள் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக Ctrl X –Cut, Ctrl V –Paste Ctrl C –copy, Ctrl Z –Undo என்பன போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். எளிய key வடிவங்கள் நேரடியாக தெரிவதனால் பயன்படுத்துதலில் எளிமையாக அமைகிறது. play, pause, loop, continuous play, record, fast forward, rewind, zoom, zoomout, 100%zoom Key-கள் நேரடியாகத் தெரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒலிப்பயன்பாட்டின் எத்தகைய வடிவ கோப்புகளையும் திறந்து மாற்றியமைக்க இயலும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. புதிய கோப்புகளைத் திறக்க மாற்றியமைக்க வழக்கமான சுருக்கு வழிகளுடன் நேரடியான இடங்களும் காட்டப்படுகின்றன. ஒலி அமைப்பினை தேவைக்கேற்ப மாற்றவும் இதில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காட்சி ஊடகம் என்பது நேரடியாக ஒளியோடு தொடர்பு கொள்கிறது பல்வேறு காட்சியமைப்புக்களை ஒன்றிணைத்தல் ஒளி,ஒலிகளை ஒன்றிணைத்தல் பல்வேறு உருவங்களை ஏற்படுத்துதல் அவற்றின் வழியாக நமது கருத்துக்களை விளக்குதல் என்பவை கற்பித்தலில் மிக முக்கிய இடம் பெறுகின்றன. அவற்றிற்கான எளிய மென்மங்களாக MS Movie maker ஐக் குறிப்பிடலாம் இதில் ஒளி வடிவங்களைத் தனியாகவும் ஒலி வடிவங்களைத் தனியாகவும் பயன்படுத்தி Dubbing பணிகளை எளிமையாக மேற்கொள்ளலாம். வழக்கமாக நேரடிக்காட்சிகளாகக் கிடைக்கும் படங்களை அவை எந்த வகை கோப்பாக இருப்பினும் மாற்ங்களைச் சேர்க்கவும் படங்களை இடையிடை ஒட்டவும் சுருக்கவும் வேகமாக ஓடவைக்கவும் இம்மென்பொருள் பயன்படுகிறது. ஒலி வடிவங்களைப் பிரித்துக்காட்டுவதால் வேறு ஒலிகளை எளிமையாக மாற்ற இயலுகிறது. தெரிந்த படங்களைக் காட்டி பல்வேறு வகையான ஒலிகளைச் சேர்த்து வகுப்பறையை ஒளி ஒலிக் கூடமாக மாற்ற முடிகிறது.

ms word, ms excel, ms PowerPoint போன்ற பேக்கேஜ்களைப் படங்களாக மாற்றவும் அவற்றுடன் ஒலி வடிவங்களை சேர்த்தும் எளிய முறையிலான அனிமேஷன்களை உருவாக்கவும் தற்போது பல புதிய மென்மங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. I screen record போன்ற மென்மங்கள் கணினியில் உள்ளீடு செய்யப்படும் தகவல்களை வீடியோ வடிவில் படம் பிடித்துத்தருகின்றன. இவற்றை புகைப்படமாகவோ வீடியோ படமாகவோ மாற்றிக் கொள்ளலாம்.

பல்லூடகத்தின் மிகச்சிறந்த படைப்பாக இன்று கருதப்படுவது அனிமேஷன் ஆகும். தற்போதைய நிலையில் மாயா எனும் பிளாஷ் வகை அனிமேஷனில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

உருவங்களில் செய்யப்படும் மாற்றங்களும் அவற்றை இருபட்டை ,முப்பட்டை வடிவில் நோக்கும் முறைகளும் பெருகி வருகின்றன. இவற்றை அறிந்து கொள்ளலே இன்றைய தமிழ் கற்பித்தலுக்கான சவாலாக உள்ளன.

நிறைவாக

தமிழ் கற்பித்தலில் புதிய வகைகளான மென்பொருட்களைப் பயன்படுத்தி தமிழ் கற்பிக்கச் செய்தலில் பல்லூடகத்தின் பங்களிப்பு மிகுதியாக காணப்படுகிறது. பக்க வரையறை கருதி கற்பித்தலில் ஒலி வடிவங்களை எடிட் செய்யும் வகையில் அடொப் ஆடிஷன் எனும் மென்பொருளைப் பயன்படுத்தும் அறிமுகம் இக்கட்டுரையில் அமைகிறது. மேலும் ஒளி வடிவங்களில் பயனர் நட்பினதாக உள்ள மைக்ரோசாப்ட் மூவிமேக்கர் எனும் மென்பொருளும் இக்கட்டுரையில் பயன்படுத்துதலில் எளிய வடிவங்களைக் கையாளுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.